# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081697

1. District : மாவட்டம் Kanyakumari PS: காவல்நிலையம் V&AC Nagercoil Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 4/2022 Date: நாள் 05.04.2022

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7(a) of the P.C Act 1988 (Amended in 2018)

(ii) Act சட்டம்: The PC Act 1988 (Amended in 2018) Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 25.03.2022 Date to : நாள் வரை 05.04.2022

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.04.2022 Time : நேரம்

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 11.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 1 Km East Accused house at Ramanputhur

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.Sivaguru kuttalam (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.Rethinasamy

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Textile merchant (g) Address : முகவரி Devi Readymades, Veppamoodu Junction, Nagercoil, Kanyakumari District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tr.Thangavel, Deputy Suprintandant of Police, District Crime Branch, Kanyakumari District @ Nagercoil.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Nil

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>Accused</u>:

**Tr.Thangavel, Deputy Suprintandant of Police, District Crime Branch, Kanyakumari District @ Nagercoil**

<u>பணிந்து சமா்ப்பிக்கப்படுகிறது</u>:- இன்று 05.04.2022-ம் தேதி காலை 11.15 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், S.ஜாண்பெஞ்சமின் ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.R.சிவகுருகுற்றாலம், த/பெ.திரு.ரெத்தினசாமி, தேவி ரெடிமேட்ஸ், வேப்பமூடு ஜங்சன், நாகர்கோவில்-1, அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:. அனுப்புநர், ர.சிவகுருகுற்றாலம் த.பெ. திரு. ரத்தினசாமி, தேவி ரெடிமேட்ஸ் வேப்பமூடு ஜங்சன் நாகர்கோவில்-1. பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறை நாகர்கோவில் கன்னியாகுமரி. ஐயா, நான் மேற்படி முகவரியில் தேவி ரெடிமேட்ஸ் என்னும் ஆயத்த ஆடைகள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறேன். எனது சொந்த முகவரி 210/2B சிவமதி பவனம் புன்னைநகர் ஆகும். எனக்கும் நாகர்கோவில் சர்குணவீதியில் வசித்து வரும் வழக்கறிஞர் திரு. இராமசுவாமி மற்றும்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 05/04/22 | S. [signature] 5/4/2022
---|---
14. Signature / Thumb Impression of the Complainant / Informant<br>குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /<br>பெருவிரல் இரேகைப் பதிவு | Signature of the Officer in-charge, Police Station<br>காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.04.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
5/4/2022 at 14:00 hrs

Name: பெயர் ............................ S.ஜாண்பெஞ்சமின்,
Rank: நிலை ............................ No. எண் காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம்

இடலாக்குடியில் ஸ்ரீராம் எலும்புமுறிவு மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வரும் மேற்படி திரு.இராமசுவாமியின் மகன் டாக்டர் திரு.ராமதாஸ் ஆகியோர்கள் என்னிடம் நல்ல பழக்கம் உடையவர்கள். எனது கடை தேவி டெக்ஸின் முன்பக்கம் ஸ்ரீராம் கட்டிடம் உள்ளது. அந்த கட்டிடத்தின் கடை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதாக 1x1 அளவில் கம்பியூட்டர் பேப்பரில் தட்டச்சு செய்து அட்டையில் ஒட்டி கட்டப்பட்டு இருந்தது. அந்த விளம்பரத்தை பார்த்தும் ஆட்கள் கூறியதை கேட்டும் திரு.இராமசுவாமி அலுவலகத்தில் 2017 ஆண்டு மே மாதம் கடையில் 10 மணியளவில் சென்று பார்க்க சென்ற போது டாக்டர் திரு.ராமதாசும் அங்கிருந்தார். இருவரும் சேர்ந்து 1 கோடியே 50 லட்சத்திற்கு மேற்படி ஸ்ரீராம் கட்டிடத்தை குத்தகைக்கு தருவதாகவும் உங்களுக்கு தேவைபட்டால் விலைக்கே தருவதாகவும் கூறினாரகள். மேற்படி நபர்கள் சமூகத்தில் அந்தஸ்தான பொறுப்பில் இருப்பதால் அவர்கள் பேச்சை நான் மிகவும் நம்பினேன். மேற்படி பேச்சுவார்தையின் தொடர்சியாக 5.6.2017 அன்று ருபாய் 150000/- அட்வான்ஸாக கொடுத்தேன். தொடர்ந்து மீதி தொகையில் ருபாய் 11350000/- க்கு வெவ்வேறு வங்கிகளின் காசோலைகளை அவர்களிடம் கொடுத்தேன். அதை அவர்கள் காசாக்கி பெற்றுக்கொண்டனர். நான் மேற்படி ருபாய் 3500000/- கொடுப்பதற்கு முன் அவர்களிடம் ஒப்பந்தம் மற்றும் கட்டிட வரி செலுத்திய ரசீது ஆகியவற்றை கேட்டேன். அவர்கள் மூன்று மாதமாகியும் தரவில்லை. எனவே நான் நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகம் சென்று கட்டிட வரி தொடர்பாக கேட்டபோது மேற்படி கட்டிடம் மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு கட்டப்படாததால் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் ஆகவே அதற்குரிய வரிவிதிப்பு செய்யவில்லை என்றும் தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக மேற்படி நபர்களை பலமுறை பார்த்தும் கட்டிடத்திற்கான வரிவிதிப்புகளை சரிசெய்து தரவில்லை. எனது பணத்தையும் திருப்பித்தரவில்லை. எனவே நான் 01.12.2021 அன்று குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரடியாக புகார் மனு கொடுத்தேன். அப்புகார் மனுவானது கோட்டார் காவல் நிலைய காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டது. அங்கு சரியாக விசாரணை நடத்தாமல் காலம் கடத்தியதால் நான் 11.01.2022 அன்று மாவட்ட கண்காணிப்பாளருக்கு மனு அனுப்பினேன். மேற்படி மனுவானது மாவட்ட குற்றபிரிவிற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது. மனுப்படி எனக்கு 01.02.2022 அன்று மாவட்ட குற்றபிரிவில்

ஆஜராகுமாறு துணை காவல் கண்காணிப்பாளர் அழைப்பாணை அனுப்பியிருந்தார். அதன்படி அதே தினம் காலை 11.30 மணியளவில் ஆஜரானேன் . மேற்படி திரு.ராமசுவாமி மற்றும் டாக்டர் திரு ராமதாஸ் ஆஜராகவில்லை எனவே மறுநாள் விசாரணைக்கு ஆஜராக சொன்னார். டாக்டர் திரு.ராமதாஸ் மட்டும் ஆஜரானார். என்னுடைய மனுப்படி மேற்படி நபர்கள் என்னை திட்டமிட்டு ஏமாற்ற வேண்டும் என்று பணத்தை பெற்றுக்கொண்ட விவரத்தை தெரிந்தும் மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.தங்கவேல் வழக்கை பதிவு செய்யவில்லை. திரு.ராமதாசை அழைத்து விசாரித்ததில் அவர் தானும் தனது தந்தையும் ரூபாய் பெற்றுக்கொண்டதை ஒப்புக்கொண்டனர். துணை காவல் கண்காணிப்பாளர் திரு.தங்கவேல் அவர்கள் பத்து நாட்களுக்கு மேல் காலம் கடத்தி முடிவில் 25.03.2022 ஆம் தேதி அவருடைய ராமன்புதூரில் உள்ள அவரது விட்டிற்கு வரச்சொல்லி அவருக்கு ரூபாய் 5 லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் கொடுத்தால் திரு.ராமதாஸ் பெயரில் ஆசாரிப்பள்ளத்தில் உள்ள 12 சென்று சொத்தை கிரையம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்வதாக கூறினார். கிரைய நடவடிக்கைகளை வெளியில் பார்த்துக்கொள்ளுங்கள் என கூறினார். இதற்கு ஒப்புக்கொள்ளாவிட்டால் பண விஷயம் சிவில் சம்மந்தப்பட்டது என மனுவை முடித்து விடுவேன் என கூறினார். திரு.ராமதாஸ்க்கும் எனக்கும் 28.03.2022 அன்று கிரையம் முடிந்தது. ஆனால் திரு.ராமதாஸ் ஆசாரிப்பள்ளத்தில் உள்ள 12 சென்று சொத்திற்கு பதிலாக ராஜாக்கமங்கலத்தில் உள்ள 23 சென்று சொத்தை கிரையம் எழுதி தந்தார். மேற்படி தங்கவேல் 5 லட்சம் கேட்டு என்னை தொடர்ந்து நேரடியாகவும் அலைபேசி எண் 9498177600 -இல் இருந்து எனது அலைபேசி எண்ணான 9788128762 தொடர்பு கொண்டு வற்புறுத்திவந்தார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் நான் 31.3.2022 ம் தேதி மாலையில் நாகர்கோவிலில் உள்ள ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்று காவல் துணை கண்காணிப்பாளர் திரு. தங்கவேல் ரூபாய் 5,00,000/- லஞ்சமாக கேட்ட விவரத்தினை வாய்மொழியாக சொன்னேன். அதற்கு புகார்மனுவுடன் திரு. தங்கவேல் கேட்ட ரூபாய் 5,00,000/- த்துடன் வரச்சொன்னார்கள். நான் நாகர்கோவிலில் உள்ள ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து வெளி வந்த பின்பு மீண்டும காவல் துணை கண்காணிப்பாளர் திரு. தங்கவேலை சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் 31.03.2022 ஆம் தேதி மாலை சுமார் 08.00 மணியளவில் ராமன்புதூரில் உள்ள அவரது வீட்டு காம்பவுண்டிற்குள் வைத்து சந்தித்த போது அவர் என்னிடம் சொத்து கிரையம் முடிந்துவிட்டது அல்லவா நான் கேட்டவாறு 5

லட்சம் தர வேண்டும் என்று கேட்டார். 01.04.2022 அன்று எனது அலைபேசியில் காவல் துணை காவல் துணை கண்காணிப்பாளர் திரு. தங்கவேல் மதியம் சுமார் 12.46 மணிக்கும் மற்றும் மாலை சுமார் 06.50 மற்றும் இரவு 08.30 மணிக்கு தொடர்பு கொண்டு பெரியவரே எப்ப வருவீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் எனது உறவினருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் 4.4.2022 ம் தேதி வந்து பார்ப்பதாக கூறினேன். பின்பு 4.4.2022 ம் தேதி மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அலைபேசியில் நான் தொடர்புகொண்டபோது மறுபடியும் அவர் அழைப்பதாக கூறினார். 4.4.2022 அன்றே மதியம் சுமார் 1.53 மணிக்கும் மற்றும் 2.16 மணிக்கும் மற்றும் 4.00 மணிக்கும் மீண்டும் அழைத்தார். நான் வருகிறேன் என்று கூறினேன். ஆனால் வேலை காரணமாக என்னால் போக முடியவில்லை. இன்று 5.4.2022 அன்று காலை சுமார் 09.04 மணிக்கு திரு.தங்கவேல் என்னை கூப்பிட்டு மாலை மாவட்ட குற்றபிரிவிற்கு வந்து அவர் கேட்ட ரூபாய் 500000 த்துடன் வருமாறு கூறினார். வீட்டில் இருந்து ஆலோசித்த பிறகு இரவும் பகலும் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தில் எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை எனவே ஒரு புகார் மனுவை தயார் செய்து நாகர்கோவில் ஊழல் தடுப்பு அலுவலகத்திற்கு சென்று திரு.தங்கவேல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிக்கொண்டேன்.இப்படிக்கு, உண்மையுள்ள, ஒப்பம், 05.04.2022 Sir, Received the complaint on 5.4.2022 at 11.15 hrs and after verifications. I am registering the complaint at Nagercoil V&AC Cr.No.4/2022 u/s. 7(a) of PC Act 1988 (As amended at 2018 on 5.4.2022 at 12.00 hrs. s/d, Inspector of Police, V&AC, Nagercoil.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனுவுடன் இணைத்து கனம் Chief Judicial Magistrate cum Special Judge Court, நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பியும் வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

S. [signature] 5/4/2022
(S. John Benjamin)
Inspector
V&AC
Nagercoil.